**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்</u>**.94/2016

பெயர்–திரு.பொன்னுசாமி நாள்.24.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

தாவா சொத்திற்கு எனது அப்பா பெயர் பெரிய மார நாயக்கன் பெயரில் செலுத்திய கந்தாய ரசீதை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் மாறிய பட்டா மாறுதல் உத்தரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், 1ம் பிரதிவாதி திம்மக்காள், 2ம் பிரதிவாதி மல்லக்காள் ஆகிய அனைவரும் ஒரே ஊரில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி திம்மக்கள் மற்ற பிரதிவாதிகளுக்கு 08.07.2002ல் ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ள விபரம் அந்த ஆண்டே எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, தானசெட்டில்மெண்ட் படி 2 முதல் 12 பிரதிவாதிகள் தாவா சொத்தை சுவாதீனம் எடுத்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் கட்டிடம் கட்ட 2016ல் முயற்சி செய்தார்கள் அப்போது 2016ம் ஆண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன், அப்போது தான் 2002 தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி பிரதிவாதிகள் சொன்னார்கள்.

நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்குண்டான மனு CSR இரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுக்காமல் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, 2002ல் 1ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டே தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் படி 2002ம் ஆண்டே தாவா சொத்திற்கான பட்டா 2 முதல் 12 பிரதிவாதிகள் பெயரில் மாறி விட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து 2 முதல் 12 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தாவா சொத்தில் கட்டிடம் கட்டவும் விற்பனை செய்யவும் பிரதிவாதிகளுக்கு முழு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் கட்டிடம் கட்ட கூடாது என சொல்வதற்கும் விற்பனை செய்ய கூடாது என சொல்வதற்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல.

2002ல் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த விபரம் தெரிந்து கொண்டு 3 ஆண்டு காலத்திற்குள் அந்த ஆவணம் செல்லாது என வழக்கு தாக்கல் செய்யாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல, எனவே எனது வழக்கை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.24 17:53:12 +0530

District Munsif